| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இறுதிஅறிக்கை தாக்கல்** | : | 05.02.2026 | **தீர்வளிக்கப்பட்டது** | : | 13.03.2026 |
| **புலன்கொள்ளப்பட்டது** | : | 05.02.2026 | **விசாரணை காலம்** | : | 1 மாதங்கள் 8 நாட்கள் |

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மேட்டூர்

**முன்னிலை:** N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L., நீதித்துறை நடுவர் எண்.1,

**2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 13 –ம் தேதி வெள்ளிக்கிழமை**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 80/2026**

**CNR No. TNSA18- 002583-2025**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், மேட்டூர் **குற்ற எண்.559/2025 பிரிவுகள் 296(b), 115(2), 118(1) of BNS.** **...புகார்தாரர்**

**–எதிர்–**

1) சசி(எ)சசிக்குமார் (33/2026) த/பெ.அருணாச்சலம், க.எண்.7/106F, பழைய மார்க்கெட், மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம்.

2) சித்ரா (51/2026) க/பெ.பழனிகவுண்டர், க.எண்.91/106A, பழைய மார்க்கெட், மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம். **..எதிரிகள்**

இந்த வழக்கில் அரசு தரப்பிற்காக கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் **திரு.T.சுரேஷ்** அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.G.ராஜேஷ்** அவர்களும், இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரீசிலணை செய்து இந்த நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

இந்த வழக்கில் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டுர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, மேட்டுர் இந்திரா நகரில் குடியிருக்கும் இந்த வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான ஆனந்த் என்பவருக்கும் இவர் ஏற்கனவே அந்த பகுதியில் வாடகைக்கு குடியிருந்த வாடகை வீட்டின் உரிமையாளர்களான எதிரிகள் 1ம் எதிரி

சசி(எ)சசிக்குமார், 2ம் எதிரி சித்ரா ஆகியோர்களுக்கும் இடையே வாடகை பணம் சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்த நிலையில், கடந்த 10.11.2025 ஆம் தேதி சுமார் காலை 9:00 மணியளவில், இந்த வழக்கின் எதிரிகள் சசி(எ)சசிக்குமார், சித்ரா ஆகியோர்கள் நிகழ்நிலை புகார்தாரர் ஆனந்தின் வீட்டிற்கு சென்று வாடகை பாக்கி ரூ.3000/– தரவேண்டும் என்று 1ம் எதிரி சசி(எ)சசிக்குமார் என்பவர் சாட்சி–1 ஆனந்தை பார்த்து கண்டார ஓழி தேவடியா பையனே என்று கெட்ட வார்த்தைகளால் திட்டி உள்ளார்கள். மேலும் மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரி சசி(எ)சசிக்குமார் என்பவர் சாட்சி–2 கண்ணையனை கழுத்தை பிடித்து தள்ளியதும், மேலும் மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 1ம் எதிரி சசி(எ)சசிக்குமார் என்பவர் சாட்சி–1 ஆனந்தை ரீப்பர் கட்டையால் மூக்கின் மீது அடித்தும், மற்றும் 2ம் எதிரி சித்ரா சாட்சி–1 ஆனந்தை ரீப்பர் கட்டையால் முதுகின் மீது அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தி உள்ளார்கள். மேற்படி சம்பவத்தில் இந்த வழக்கின் எதிரி சக்திவேல் **பாரத நீதிச் சட்டம் பிரிவுகள் 296(b), 115(2) மற்றும் 118(1)** ஆகியவற்றின் கீழ் குற்ற செயல்கள் செய்துள்ளதாக **மேட்டூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் கனகராஜ்** என்பவர் கடந்த **2025 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 4 ஆம் தேதி** இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இறுதி அறிக்கையின் அடிப்படையில் ஏற்பட்ட குற்ற வழக்கு இதுவாகும்.

## வழக்கு விசாரணை விவரங்கள்

( மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:– R.O.C. No. 814/2020/RG/F1, நாள்:

07.04.2021–ன் படி)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| i. | குற்றஞ்சாட்டப்பட்டவர் சிறையில் இருந்த காலம் | : | இந்த வழக்கில் எதிரி காவல் துறையினரால் கைது செய்யப் படவில்லை. | | |
| ii. | புகார் / இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | : | 04.02.2026 | | |
| iii. | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | : | பொருந்தாது | | |
| iv. | குற்றவியல் விசாரணை முறைச் சட்டம். பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | 09.03.2026 | | |
| v. | கு.வி.மு.ச. பிரிவு 317–ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட | : | 1) CMP.4800/2025 dated.25.11.2025 Surrender petition accepted.<br>2) MP. /2026 dated.07.03.2026 Advance Hearing Petition allowed. | | |
| vi. | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம் | : | | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 10.03.2026 | இல்லை |
| | | | அ.சா.2 | 10.03.2026 | இல்லை |
| | | | அ.சா.3 | 11.03.2026 | இல்லை |
| | | | அ.சா.4 | 11.03.2026 | இல்லை |
| | | | அ.சா.5 | 11.03.2026 | இல்லை |
| | | | அ.சா.6 | 11.03.2026 | இல்லை |
| | | | அ.சா.7 | 11.03.2026 | 11.03.2026 |
| vii. | கு.வி.மு.ச. பிரிவு 313–ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி | : | 12.03.2026 | | |
| viii. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | – | | |

| | | | |
|---|---|---|---|
| ix. | மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் | : | இல்லை |

1. இந்த வழக்கில் கடந்த **05.02.2026–ம்** தேதி, எதிரிகளுக்கு எதிரான குற்றங்கள் புலன்கொள்ளப்பட்டு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் ஆஜரான எதிரிகளுக்கு **1973–ம் வருடத்திய பாரத குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 230–ன் படி** வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கடந்த **07.03.2026ம்** தேதி இலவசமாக வழங்கப்பட்டது.

2. அதன் பின்னர் கடந்த **09.03.2026** தேதி இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், **எதிரிகள் சசி(எ)சசிக்குமார், சித்ரா, பாரத நீதிச்சட்டம் பிரிவுகள் 296(b), 115(2), 118(1)–ன் படியும்,** குற்றச்செயல்களை செய்துள்ளார்கள் என்று அனுமானிக்க தகுந்த முகாந்திரங்கள் உள்ளதாக கருதி, கீழ்கண்டவாறு குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு படித்துக் காட்டி, விளக்கி கூறி, வினவிய போது, தான் குற்றவாளி அல்ல எனவும், வழக்கை விசாரிக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

3. ஆகவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, இந்த வழக்கில் அரசு தரப்பில் **அ.சா. 1 முதல் அ.சா.7** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

4. **அரசு தரப்பு சாட்சிகள் வாயிலாக அறியப்படும் வழக்கின் விபரம்:**

a) **பாதிக்கப்பட்ட நபர் சாட்சியம்:** இந்த வழக்கில் **அ.சா.1 ஆனந்த்** என்பவருக்கும், அசா.1 ஆனந்திற்கும் எதிரிகளுக்கும் வீட்டு வாடகை கொடுப்பது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்துள்ளது. சுமார் 4 மாதத்திற்கு முன்பு வாடகைப்பற்றி பேசிக்கொண்டிருந்துள்ளார்கள். அப்போது கூட்டத்தில் இருந்த யாரோ இருவர் அ.சா.1 ஆனந்தையும் அவருடன் இருந்த அ.சா.2 கண்ணய்யன் என்பவரையும் கீழே தள்ளி அடித்துவிட்டார். கூட்டத்தில் எதிரிகளும் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் எதிரிகளின் மீது புகார் கொடுத்துவிட்டார். புகாரிலுள்ள கையெழுத்து அ.சா.1 ஆனந்துடையதுதான் ஆனால் அவருக்கு அதிலுள்ள விவரங்கள் தெரியாது.

b) **நேரில் பார்த்த சாட்சிகள்:** இந்த வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட, மேற்படி **அ.சா.3 வெண்ணிலா, அ.சா.4 கார்த்திக் மற்றும் அ.சா.5 முருகேசன்** ஆகியோர், தாங்கள் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், மேற்படி அ.சா.1 ஆனந்த் மற்றும் அ.சா.2 கண்ணய்யன் என்பவர்களை யார் அடித்தார்கள் என்று அவர்களுக்கு தெரியாது என்றும், அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் பார்வை மகஜர் சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.6 பாலசுப்பிரமணியம் பார்வை மகஜரில் உள்ள சாட்சி கையெழுத்து தன்னுடையதுதான என்றும், மற்றபடி இந்த வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்ற விதமாக இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார்.

c) **மருத்துவ சிகிச்சை மற்றும் ஆவணங்கள்:** மேற்படி சம்பவத்தில் காயமடைந்த அ.சா.1 ஆனந்த் மற்றும் அ.சா.2 கண்ணய்யன் ஆகியோர் மேட்டூர் அரசு மருத்துவமனையில் கடந்த **10.11.2025–ஆம்** தேதி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளார். மேற்படி இருவருக்கும் ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று **அ.சா.ஆ.11 மற்றும் காயச் சான்றிதழ்களில்** குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி **ஆனந்த்** சிகிச்சையில் இருக்கும் போது **மேட்டூர் காவல் நிலைய சிறப்பு காவல் ஆய்வளார் மோகன்** என்பவர் அவரை விசாரித்து அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

d) **முதல் தகவல் அறிக்கை:** அதன் பிறகு காவல்நிலையம் வந்து அந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்படி **கொளத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மோகன்** என்பவர் **கொளத்தூர் காவல் நிலைய குற்ற எண்.** 559/2025 என்ற எண்ணில் **பாரத நீதிச்சட்டம் பிரிவுகள் 296(b), 115 மற்றும் 115(2)** ஆகியவற்றின் கீழ் **அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை** பதிவு செய்துள்ளார்.

e) **சம்பவயிட விசாரணை:** அதன்பின்னிட்டு வழக்கை புலன் விசாரணை எடுத்துக் கொண்ட **மேட்டூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் மோகன்** சம்பவ இடம் சென்று, சாட்சிகளான **ஆறுமுகம் மற்றும் பாலசுப்ரமணி** ஆகிய இருவர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, **அ.சா.ஆ. 7 பார்வை மகஜர்** மற்றும் **அ.சா.ஆ. 8 மாதிரி வரைபடம்** தயார் செய்துள்ளார். மேலும் சம்பவயிட சாட்சிகளை

தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

f) **இறுதியறிக்கை:** மேலும் இந்த வழக்கில் இறுதிகட்ட புலன் விசாரணை மேற்கொண்ட அலுவலர் **உதவி ஆய்வாளர் கனகராஜ்** கடந்த **04.12.2025–**ஆம் தேதி தனது புலன் விசாரணை முடித்து கடந்த **04.02.2026–**ஆம் தேதி எதிரிக்கு எதிராக **பாரத நீதிச் சட்டம் பிரிவுகள் 296(b), 115(2), 118(1)** ஆகியவற்றின் கீழ் குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

5. மேற்படி அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னர், கடந்த **12.03.2026ம்** தேதி அரசு தரப்பு சாட்சியங்களில், **பாரத குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 351(1)(b)–ன் படி** எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சங்கதிகளை தொகுத்து, படித்துக்காட்டி விளக்கிக் கூறி கேள்வி கேட்ட பொழுது, அவற்றை பொய்சாட்சி என மறுத்து, அவரது தரப்பில் சாட்சி இல்லை என தெரிவித்தார். ஆகவே எதிரி தரப்பு சாட்சி விசாரணை கடந்த **13.03.2026**ம் தேதி முடிக்கப்பட்டு எதிரி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

6. **இந்த வழக்கில் தீர்வளிக்கப்பட வேண்டிய எழுவினா யாதெனில்? அரசுத்தரப்பு, எதிரிகளுக்கு எதிராக சுமத்தியுள்ள குற்றச்சாட்டை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணம் செய்துள்ளதா? என்பதாகும்.**

7. இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு எதிரித்தரப்பில் எந்தவித சாட்சியங்களும், ஆவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் அரசு தரப்பில் பாதிக்கப்பட்ட நபராக விசாரணை செய்யப்பட்ட **அ.சா.1**

**ஆனந்த் மற்றும் அ.சா.2 கண்ணய்யன்** என்பவரும் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் பார்வை மகஜர் சாட்சியாக குறிப்பிடப்பட்ட **அ.சா.3 வெண்ணிலா, அ.சா.4 கார்த்திக் மற்றும் அ.சா.5 முருகேசன்** என்பவரும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் இருதரப்பினரும் சமாதானமாக சென்றுவிட்டதாக தெரிவித்ததன் அடிப்படையிலும், பாதிக்கப்பட்ட நபர்களே அரசு தரப்பு வழக்குக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையிலும், அவர்களைத் தவிர அரசு தரப்பில் குறிப்பிடப்பட்ட தனிப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

8. இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட **அ.சா.1 ஆனந்த் மற்றும் அ.சா.2 கண்ணய்யன்** ஆகிய இருவரும், தனது சாட்சியத்தில் தங்களுக்கும் எதிரிகளுக்கும் வீட்டு வாடகை கொடுப்பது சம்மந்தமாக பிரச்சனை இருந்து, சுமார் 4 மாதத்திற்கு முன்பு வாடகைப்பற்றி பேசிக்கொண்டிருந்தாகவும், அப்போது கூட்டத்தில் இருந்த யாரோ இருவர் தங்களை கீழே தள்ளி அடித்துவிட்டார்கள் எனவும், கூட்டத்தில் எதிரிகளும் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் எதிரிகளின் மீது புகார் கொடுத்துவிட்டார் எனவும், புகாரிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் எனவும், அதிலுள்ள விவரங்கள் தெரியாது என இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி எதிரிகள் தங்களை கெட்ட வார்த்தைகளால் திட்டியதாகவோ, அடித்து காயம் ஏற்படுத்தியதாகவோ, பாதிக்கப்பட்ட நபர்கள் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை.

9. **காயங்கள் மற்றும் அதற்கான காரணங்கள்:** இந்த வழக்கில் காயம் பட்ட அ.சா.1 ஆனந்த் மற்றும் அ.சா.2 கண்ணய்யன் ஆகியோருக்கு மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து அ.சா.ஆ.11 மற்றும் அ.சா.ஆ.12 காயச்சான்றிதழ்கள் வழங்கியுள்ளார். ஆனால் அந்த காயமானது இந்த வழக்கின் எதிரிகளால் தான் ஏற்பட்டது என்று மேற்படி பாதிக்கப்பட்ட நபர்கள் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்காததால், மேற்படி மருத்துவ சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு எந்த விதத்திலும் பயன்படவில்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10. **இரண்டாம் நிலை மற்றும் சூழ்நிலை சாட்சியங்கள்**: இந்த வழக்கு சம்பவம் குறித்து சிசிடிவி பதிவுகள் புகைப்படங்கள் மற்றும் வீடியோ பதிவுகள் போன்ற இரண்டாம் நிலை சாட்சியங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் இந்த வழக்கில் முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில், இந்த வழக்கு சம்பவத்திற்கு எதிரிகள் தான் காரணம் என்பதை நிரூபிக்கும் விதமாக சூழ்நிலை சாட்சியங்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

11. **புலன்விசாரணை சாட்சியம்:–** இந்த வழக்கில் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த காயம்பட்ட ஆனந்த் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தது முதற்கொண்டு, இறுதியாக புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது வரை, தற்போது மேட்டுர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரியும் **அ.சா.7 லதா** என்பவர் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி இந்த வழக்கில்

பாதிக்கப்பட்ட நபரே அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத சூழ்நிலையிலும், இந்த வழக்கில் எதிரிகள் தான் குற்றச்செயல்களை செய்தார்கள் என்பதற்கான இரண்டாம் நிலை மற்றும் சூழ்நிலை சாட்சியங்கள் எதுவும் அரசு தரப்பில் இல்லாத காரணத்தாலும், இந்த வழக்கில் நடைபெற்ற புலன் விசாரணை குறித்து பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

## முடிவுரை

ஆகவே மேற்கண்ட காரணங்கள் அடிப்படையிலும், இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபர்களாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.1 ஆனந்த் மற்றும் அ.சா.2 கண்ணய்யன் ஆகியோர்கள் இந்த வழக்கில் அரசு தரப்பு வழக்கில் குறிப்பிட்டுள்ளவாறு தங்களுக்கு காயம் ஏற்பட்டதாகவும், எதிரிகள் தங்களை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், இந்த நீதிமன்றத்தில் சாட்சி அளிக்காததாலும், மேலும் அரசு தரப்பு தனது வழக்கை நிரூபிக்கும் விதமாக போதிய இரண்டாம் நிலை மற்றும் சூழ்நிலை சாட்சியங்கள் எதுவும் இல்லாத காரணத்தாலும், இந்த வழக்கில் சம்பவத்தின் போது எதிரி அ.சா.1 ஆனந்த் மற்றும் அ.சா.2 கண்ணய்யன் ஆகியோரை தகாத வார்த்தைகளால் திட்டி, அடித்து சாதரண காயம் ஏற்படுத்தி **பாரத நீதிச்சட்டம் பிரிவுகள் 296(b), 115(2) மற்றும் 118(1)** ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றச்செயல்கள் செய்துள்ளார் என்று அரசு தரப்பு போதிய சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் சந்தேகத்துக்கிடமிருந்து நிரூபணம் செய்யவில்லை என தீர்மானித்து, இந்த வழக்கில் தீர்வு அளிக்கப்பட வேண்டிய எழுவினாவிற்கு அரசு தரப்பிற்கு எதிராக இந்த நீதிமன்றம் விடை அளிக்கிறது.

முடிவாக இந்த வழக்கின் **எதிரிகள் சசி(எ)சசிக்குமார் மற்றும் சித்ரா** ஆகிய இருவரும் **பாரத நீதிச்சட்டம் பிரிவுகள் 296(b), 115(2) மற்றும் 118(1)** ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து **பாரத குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 278(1)–ன்** கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த வழக்கில் சான்று பொருள்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் எனது சுருக்கெழுத்திற்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழை திருத்தம் செய்து, சரிபார்க்கப்பட்டு, இன்று **2026ம் வருடம் மார்ச் மாதம் 13–ம் தேதி** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டு, எனது கையொப்பமும், நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.03.13 19:42:00 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

**அரசு தரப்பு சாட்சிகள்**

அ. சா. 1 ஆனந்த்

அ. சா. 2 கண்ணையன்

அ. சா. 3 வெண்ணிலா

அ. சா. 4 கார்த்தி

அ. சா. 5 முருகேசன்

அ. சா. 6 பாலசுப்ரமணியன்

அ. சா. 7 திருமதி.லதா, தலைமைக்காவலர்

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

அ. சா. ஆ.1 அ.சா.1 ஆனந்த் என்பவரின் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து

அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் உள்ள அசா.6 பாலசுப்ரமணியத்தின் முதலாவது கையெழுத்து

அ. சா. ஆ.3 புகார் வாக்குமூலம்

அ. சா. ஆ.4 மருத்துவமனை தகவல்

அ. சா. ஆ.5 மனு ரசீது

அ. சா. ஆ.6 முதல் தகவல் அறிக்கை

அ. சா. ஆ.7 பார்வை மகஜர்

அ. சா. ஆ.8 மாதிரி வரைபடம்

அ. சா. ஆ.9 மேட்டூர் அரசுமருத்துவமனையில் ஆனந்திற்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடுகள்

அ. சா. ஆ.10 மேட்டூர் அரசுமருத்துவமனையில் கண்ணையனுக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடுகள்

அ. சா. ஆ.11 மேட்டூர் அரசுமருத்துவமனையில் ஆனந்திற்கு வழங்கப்பட்ட காயச்சான்றிதழ்

அ. சா. ஆ.12 மேட்டூர் அரசுமருத்துவமனையில் ஆனந்திற்கு வழங்கப்பட்ட

காயச்சான்றிதழ்

**அரசு தரப்பு சான்று பொருள் :– இல்லை**

**எதிரி தரப்பு சாட்சிகள்:– இல்லை**

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்:– இல்லை**

**எதிரி தரப்பு சான்று பொருட்கள்:– இல்லை**

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.03.13 19:41:47 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1 ,மேட்டூர்.**

**குறிப்பு**

1. தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.
3. இவ்வழக்கில் சாட்சிகள் மூன்று முறைக்கு மேல் இந்த நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.

**நகல்:–**

1) மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.



N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L.,நீதித்துறை நடுவர் எண்.1 ,
மேட்டூர்
13.03.2026